# நடப்பட்ட இடத்தில்
# மலருங்கள்



# நடப்பட்ட இடத்தில் வளருங்கள், மலருங்கள்!

## Grow Where You’re Planted

*(பாட ஆதாரம்: Christian Resources App > Audio Sermons > 2018 General Convention > “Nathan Austin – Grow Where You’re Planted”)*

*English version :*
***Christian Resources App***

Tamil Translated by :
***www.foodfornewcreature.com***

# நடப்பட்ட இடத்தில் வளருங்கள், மலருங்கள்!

## முன்னுரை

*இப்பாடத்தின் தலைப்பினை வைத்தே, இது எந்தக் கோணத்தில் அமைந்திருக்கும், அதன் சுருக்கம் என்ன என்பதெல்லாம் ஏற்கெனவே உங்களுக்குப் புலப்பட்டிருக்கும் என்று எண்ணுகிறோம். "Grow/Bloom where you're planted" எனும் இப்பாடத் தலைப்பின் ஆங்கில சொற்றொடரை உங்களில் பலருக்கும் தெரிந்திருக்க வாய்ப்புள்ளது. இருப்பினும், இப்பாடத்தில் சோதனை வேளைகளில் நாம் மனதில் வைக்க வேண்டிய சில ஆலோசனைகளும், சில புதிய கண்ணோட்டங்களும் கிடைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.*

*நீங்கள் என்றைக்காவது 'நான் இருக்க வேண்டிய இடமே இது கிடையாது' என்று நினைத்ததுண்டா? அல்லது, வேறு ஏதாவது இடம் " இக்கரைக்கு அக்கரை பச்சையாக" தெரிந்ததுண்டா? அல்லது, எவ்வளவுதான் சரியானதைச் செய்ய விடாமுயற்சியுடன் உழைத்தாலும், உங்களுக்குத் தேவையான பதவி உயர்வோ, வாய்ப்போ அல்லது ஆதரவோ கிடைக்கவில்லையே என்று என்றைக்காவது நீங்கள் உணர்ந்ததுண்டா?*

*அன்பர்களே, ஏதோ உங்களுக்கு மட்டும் இப்படியெல்லாம் சிந்தனைகள் வருகின்றன என்று நினைக்க வேண்டாம், இதில் நீங்கள் தனியாக இல்லை. நான் (பேச்சாளர்) உட்பட நம்மில் அநேகருக்கு இம்மாதிரியான எண்ணங்கள் தோன்றி, அடிக்கடி சிரமத்திற்குள்ளாகிறோம் என்பது மறுக்க முடியாத நிதர்சனமாகும்.*

***"...அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது..."** எனும் **உரோமர் 8:28**ஆம் வசனத்தை நாம் அனைவருமே அறிவோம்.*

*ஆனால் '**தேவன் சகலத்தையும் நன்மைக்கேதுவாக நடத்தித் தருவார்**' என்பதை அறிந்துவைத்துக்கொள்வதும், அதனை மறவாமல் ஞாபகத்தில் வைப்பதும் இரண்டும் ஒன்றல்ல. இதனை நாம் ஞாபகத்தில்வைப்பது முக்கியமாகும், அதிலும் குறிப்பாக கடினமான/சோதனையான வேளைகளில், இதனை நாம் ஞாபகத்திலும் இருதயத்திற்கும் நெருக்கமாக வைத்துக்கொள்வது இன்னும் முக்கியமாகும்.*

*இப்படியாக "தாங்கள் நடப்பட்ட இடத்தில் வளர்ந்து மலர வேண்டியிருந்த" ஜனங்கள் பலர் வேதாகமத்திலும் காணப் படுகின்றனர் – அப்படிப்பட்ட சில வேதாகம முன்மாதிரிகளை நாம் இங்கே தியானிக்கப் போகிறோம்.*

## ரூத்

*ஆம், நாம் முதலில் பார்க்கப்போகிறவர் – ரூத். ரூத்திற்கு என்ன சிரமம் ஏற்பட்டது? என்று கேட்டால், அவள் தனது மாமியுடன் சொந்த ஊரைவிட்டு, வேற்றூருக்குச் செல்ல வேண்டியிருந்தது என்று நாம் எளிதாக பதிலளித்து விடுவோம். ஆனால், ஒரு புறஜாதி ஸ்திரீயாக இருந்த ரூத், ஒரு யூத குடும்பத்திற்கு திருமணமாகிப் போனபோது அவள் எம்மாதிரியெல்லாம் உணர்ந்திருப்பாள் என்பதை நாம் என்றைக்காவது நினைத்துப் பார்த்ததுண்டா?*

***" நகோமியின் புருஷனாகிய எலிமெலேக்கு இறந்து போனான்; அவளும் அவளுடைய இரண்டு குமாரரும் மாத்திரம் இருந்தார்கள். இவர்கள் மோவாபியரில் பெண் கொண்டார்கள்; அவர்களில் ஒருத்தி பேர் ஒர்பாள், மற்றவள் பேர் ரூத்; அங்கே ஏறக்குறையப் பத்துவருஷம் வாசம்பண்ணினார்கள். பின்பு மக்லோன் கிலியோன் என்னும் அவர்கள் இருவரும் இறந்து போனார்கள்; அந்த ஸ்திரீ தன் குமாரர் இருவரையும் தன் புருஷனையும் இழந்து தனித்தவளானாள்." – ரூத் 1:3 – 5.***

*சில வசனங்களில் அநேக சம்பவங்கள்! இங்கே, முதலில் எலிமெலேக்கு என்பவர் மரித்துப்போகிறார். பிறகு அவரது இரண்டு குமாரரும் மோவாபிய ஸ்திரீகளை விவாகஞ்*

செய்கிறார்கள். ஆனால் யூத முறைப்படி, இம்மாதிரி அந்நிய ஸ்திரீகளை மணப்பது தடைசெய்யப்பட்ட ஒரு காரியமாகும். 10 வருஷம் கழித்து, அந்த இரு குமாரரும் மரித்துப்போகிறார்கள். இப்படியாக, இந்த ரூத் தன் இனமல்லாத ஓர் அந்நிய குடும்பத்திற்கு திருமணமாகி வந்த சில பல வருடங்களிலேயே விதவையாகிறாள். பிறகு, அவளுடைய மாமியாகிய நகோமியும் தன் சொந்த ஜனத்திடமே திரும்பிப்போக முடிவு செய்கிறாள்.

*[இந்த நிலைமையில் ஒருவேளை நீங்கள் ரூத்தின் இடத்தில் காணப்பட்டிருந்தால், என்ன செய்து இருப்பீர்கள்?!]*

இப்படிப்பட்ட சமயத்தில் ரூத் முன்பாக இரண்டு வழிகள் காணப்பட்டன. ஒருபுறம், நகோமி தன் சொந்த குடும்ப உறவாக காணப்படுகிறாள். மறுபுறம், அவளோ இஸ்ரயேலுக்குத் திரும்பிச் செல்லவிருந்தாள். ஒரு புறஜாதி ஸ்திரீக்கு இஸ்ரயேலின் பழக்கவழக்கங்கள் விசித்திரமானதாக இருக்கும், பொதுவாக அவர்கள் புறஜாதிகளையோ புறஜாதி தேவர்களையோ விரும்ப மாட்டார்கள், அவர்கள் தொழும் கடவுளும் வேறு, அங்கே அவளுடைய எந்தச் சொந்தபந்தமும் காணப்பட மாட்டார்கள், அனைத்தும் புதிது, அனைவரும் புதியவர்கள்.



*அந்தச் சமயத்தில் ரூத் இன்னுமே ஒரு வாலிப ஸ்திரீயாக இருந்திருக்க வேண்டும். அவளுக்குத் திருமணமாகி பத்து வருடங்கள் மட்டுமே ஆகியிருந்தன, இந்தக் கட்டத்தில் அவளுக்குக் குழந்தைகளும் இல்லை. எனவே, இஸ்ரயேலுக்குக் குடிபெயர்வது என்பது தன் வாழ்க்கையையே புரட்டிப்போடும் ஒரு முடிவாக அவளுக்கு இருந்திருக்க வேண்டும். அங்கே அவளுடைய மாமி நகோமி எனும் உறவைத் தவிர, வேறொரு உறவும் இருக்கப்போவதில்லை, பரிச்சயமான ஒன்றுமே காணப்பட மாட்டாது, புறஜாதி ஸ்திரீயை மறுமணம் செய்ய விரும்பும் வரன் யாராவது அங்கே காணப்படுவார்களா என்பதும் நிச்சயமில்லை.*

*ரூத் என்ன நினைத்திருப்பாள் என்பது நமக்குத் தெரியாது, ஆனால் அவளுடைய நிலைமையில் வேறொருவர் இருந்திருந்தால், தனது சொந்த நாட்டில் தங்கிவிடவே ஆசைப்படுவார். சொல்லப்போனால், நகோமியும்கூட தன் மருமகள்கள் இருவரையும் அங்கேயே இருக்கும்படிக்கே அறிவுறுத்தினாள்:*

***“அதற்கு நகோமி: 'என் மக்களே, நீங்கள் திரும்பிப் போங்கள்; என்னோடே ஏன் வருகிறீர்கள்? உங்களுக்குப் புருஷராகும்படிக்கு, இனிமேல் என் கர்ப்பத்திலே எனக்குப் பிள்ளைகள் உண்டாகுமோ?'...அப்பொழுது அவர்கள் சத்தமிட்டு அதிகமாய் அழுதார்கள்; ஓர்பாள் தன் மாமியை முத்தமிட்டுப் போனாள்; ரூத்தோ அவளை விடாமல் பற்றிக் கொண்டாள். அப்பொழுது அவள்: 'இதோ, உன் சகோதரி தன் ஜனங்களிடத்துக்கும் தன் தேவர்களிடத்துக்கும் திரும்பிப் போய்விட்டாளே; நீயும் உன் சகோதரியின் பிறகே திரும்பிப்போ' என்றாள்.” – ரூத் 1:11, 14 – 15***

*மாமி சொன்னதற்கிணங்க, ஓர்பாள் தன் ஜனங்களிடத்துக்கும் தன் தேவர்களிடத்துக்கும் திரும்பிச் சென்றாள். ஆனால் ரூத்தோ வேறொரு முடிவெடுத்தாள்.*

***“அதற்கு ரூத்: 'நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப் போவதைக்குறித்து, என்னோடே***

***பேசவேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன். நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம்பண்ணப்படுவேன்; மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்' என்றாள்." – ரூத் 1:16 – 17***

*நகோமி அவ்வளவு தூரம் எடுத்துச் சொல்லியும், ரூத் தன்னுடைய முடிவில் உறுதியாக இருந்தாள்! இதனை வைத்துப்பார்க்கும்போது, இம்முடிவினை அவள் எந்த நிர்ப்பந்தத்தின்பேரிலும் எடுக்கவில்லை என்பது தெளிவாக தெரிகிறது. அவள் முறுமுறுத்ததாகவோ, துயரத்தையும், மனச்சோர்வையும் வெளிப்படுத்தினதாகவோ நமக்குச் சொல்லப்படவில்லை. மாறாக, அவள் தன் மாமியைப் பராமரிப்பதில் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டாள்.*

*இவ்வாறு அவர்கள் யூதாவுக்குத் திரும்பிய பிறகு, ரூத்தோ அறுவடையாளர்கள் மீதம் விட்டுச் சென்ற கதிர்களைச் சேகரிப்பதற்காக வயல்வெளிக்குச் சென்றாள். இது ஒரு சிறுமையான வேலையாகும், இது அவர்களின் வறுமையை அடையாளப்படுத்தியது. ஆனால், ரூத் இதையெல்லாம் பொருட்படுத்தாமல், தன் பொறுப்பினை உணர்ந்தவளாய், நகோமிக்கும் தனக்கும் தேவையான உணவினைச் சேகரிக்கச் சென்றாள்.*



*அவள் எந்த மனநிலையில் இந்தச் செயலைச் செய்ய முற்பட்டாள் என்பது குறித்து நமக்குச் சொல்லப்படவில்லை. இருப்பினும், அவள் எந்த விடாப்பிடியான உறுதியோடு தன் மாமியுடன் கூட வந்தாளோ, அதே விடாப்பிடியான உறுதியோடு*

இந்தச் செயலைச் செய்திருப்பாள் என்று அனுமானிப்பது நியாயமானதாக இருக்கும்.

இந்த முன்மாதிரியைப் பின்பற்றி, நாமும் சரியானதைச் செய்வதில் விடாப்பிடியான உறுதியோடு இருப்போமாக, அதுவே காரியமாகும்.

நம்மால் எந்த வழிகளிலெல்லாம் ரூத்தைப் போல் இருக்க முயற்சிக்க முடியும்? யோசிக்கலாம் அன்பர்களே.

'சரியானதை செய்ய' வேண்டும், ஆனால் அக்காரியம் தனிப்பட்ட முறையில் சவாலானதாக இருக்கிறது என்கிற நிலைமை நமக்கு என்றேனும் ஏற்பட்டுள்ளதா? ஆம், ரூத்தின் முன்மாதிரியை நினைவில் வைத்தவர்களாய், நம்மை நாமே உந்தித்தள்ளி, மனவிருப்பத்தோடும், மனமகிழ்ச்சியோடும் சரியான காரியங்களைச் செய்ய முற்பட வேண்டும்.

நமது சகோதர சகோதரிகளுக்கோ அல்லது நமது குடும்பத்தாருக்கோ ஊழியஞ்செய்வதினால் நமக்கு (நம்முடைய பழைய மனுஷனுக்கு, மாம்சத்திற்கு) தனிப்பட்ட விதத்தில் என்றேனும் மாபெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதா? அப்படியானால், ஒன்றை நாம் நினைவில் வைக்கலாம். அவ்வாறு செய்வது சரியே! மாம்சத்தின் நஷ்டம் ஆவிக்கு (புதுச்சிருஷ்டிக்கு) ஆதாயம்! மாம்சத்திற்கு எதிராக நாம் போராட வேண்டும் என்பது ஏதோ நாம் அறியாத புது விஷயம் இல்லை. நமது நிலையைக் கண்டு நாம் முறுமுறுக்கவோ அல்லது சுயபட்சதாபம்கொள்ளவோ நாம் தூண்டப்படும் போதும்சரி, நமது மாம்சம் 'சுலபமான வழியைத் தேர்ந்தெடுத்து இன்பமாக வாழ்' என்று நம்மைத் தூண்டும்போதும்சரி, இந்த ரூத்தின் நெஞ்சுரமிக்க முன்மாதிரியை நாம் நினைவில்வைத்து, 'ரூத்தால் சரியானதைச் செய்ய உறுதியாக செயல்பட முடியுமென்றால், நம்மாலும் முடியும்' என்று நாம் சரியானதைச் செய்ய முயற்சிக்க வேண்டும்.

ரூத் நெஞ்சுரமிக்க ஒரு முன்மாதிரியாக இருந்து, கடினமான சிரமங்கள் மத்தியிலும், சரியானதை,

*தேவையானதைச் செய்தாள். இறுதியில், சரியானதைச் செய்ததற்காக அவள் பெரிதும் ஆசீர்வதிக்கவும்பட்டாள்.*

## எஸ்தர்

*எஸ்தர் நெஞ்சுரமிக்க குணத்திற்கு மற்றொரு முன்மாதிரியாக திகழ்கிறாள்.*

*அவள் தன்னுடைய இளம் வயதிலேயே பெற்றோரை இழந்து, பிற்பாடு, தனது பதின்வயதில் புறஜாதி இராஜாவுக்கு மணவாட்டியாவதற்காக ஒப்புக்கொடுக்கப்பட்டாள். கண்டிப்பாக இது அவளுக்கு ஏதோ இன்பச் சுற்றுலா போல் இருந்திருக்க வாய்ப்பில்லை. இராஜாவின் கவனம் தன்மேல் விழ வேண்டும் என்கிற ஆசையில் காணப்பட்ட பல பெண்கள் அங்கே காணப்பட்டிருக்க வேண்டும். இதனிமித்தம் அந்தப் பெண்கள் தங்களுக்குள் சண்டைப்பண்ணவும் செய்திருக்கலாம். இவர்கள் மத்தியில் எஸ்தர் காணப்பட்டாள்!*

*மறுபுறம், இராஜாவாகிய அகாஸ்வேருவோ கோபக்காரன், கடுமையானவன், ஈவு இரக்கமின்றி நடந்து கொள்ளக்கூடியவன். சரித்திரத்திலும் அவனுடைய குணத்தைக் குறித்து விவரிக்கும் சம்பவங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட ஒரு மனுஷனையே எஸ்தர் மணக்க வேண்டியிருந்தது.*

*இதையெல்லாம் தாண்டி எஸ்தர் இராணியான பிறகும் கூட, அவளுடைய வாழ்க்கை சிரமமாகவே காணப்பட்டது. தேசத்தின் அனைத்து யூதர்களையும் கொல்ல சூழ்ச்சி செய்த ஆமானின் தீய சதித்திட்டத்தைத் தடுப்பது எனும் மாபெரும் பொறுப்பு அவள்மேல் விழுந்தது. அவள் அப்போது ஏறக்குறைய 20 வயதுடையவளாய் இருந்திருக்கலாம். அதற்குள்ளாகவே அவள் தன்னுடைய வாழ்க்கையில் அநேக கடினமான சூழ்நிலைகளைக் கடந்து வர நேரிட்டது. இப்போதோ, இராஜாவின் மிகவும் நம்பகமான ஆலோசனைக் காரனாகிய ஆமானை அவள் ஞானமாக முறியடிக்க வேண்டியிருந்தது. அதிலும், தான் செய்ய வேண்டியதைச் சரியாகச் செய்ய வேண்டிய நிலை. சிறிது தவறினாலும், இராஜாவின் கோபத்திற்கு ஆளாக*

*நேரிடும். இராஜா அவளை நாடுகடத்தக்கூட கட்டளையிடலாம். கரணம் தப்பினால் மரணம் எனும் நிலை.*

*இவ்விதமாக அவளுக்கு முன்பாக அநேக சவால்கள் காணப்பட்டபோது, அவள் என்ன செய்தாள்? சோதனையில் சுணங்கிப்போகவோ ஓடிப்போகவோ செய்தாளா? அல்லது 'போதும், இதற்குமேல் முடியாது, இனி நான் நிம்மதியாக மகிழ்ச்சியாக வாழவே விரும்புகிறேன்' என்று முடிவெடுத்தாளா? இதில் எதுவுமே அவள் செய்யவில்லை. முதலில் தயங்கினாலும், பின்னர் தன்னுடைய வளர்ப்புத் தந்தையாகிய மொர்தெகாய் கொடுத்த ஊக்கத்தின்பேரில் தயக்கம் நீங்கிச் செயல்பட்டாள். ஆடம்பரமான அரச வாழ்க்கையை அனுபவிப்பதற்குப் பதிலாக, தேவனுடைய வழிநடத்துதலை அவள் ஏற்றுக்கொண்டாள். மொர்தெகாயின் வார்த்தைகள் மூலமாக, ஒரு நோக்கத்திற் காகவே தனக்கு இந்த இராஜமேன்மை கிடைத்துள்ளது என்பது அவளுக்குத் தெளிவாக்கப்பட்டது.*

***"மொர்தெகாய் எஸ்தருக்குத் திரும்பச் சொல்லச்சொன்னது: 'நீ இராஜாவின் அரமனையிலிருக்கிறதினால், மற்ற யூதர் தப்பக்கூடாதிருக்க, நீ தப்புவாயென்று உன் மனதிலே நினைவு கொள்ளாதே. நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும்***



***அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு இராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும்' என்று சொல்லச் சொன்னான்." – எஸ்தர் 4:13 – 14.***

*இதனைக் கேட்ட எஸ்தர் தனது சூழ்நிலைகள் தற்செயலானது அல்ல என்பதை உணர்ந்துகொண்டாள். இது கர்த்தருடைய வழிநடத்துதலே! என்பதை உணர்ந்தவளாய், அவள் தன் ஜனங்களுக்கு ஞானமான ஆலோசனையை வழங்கினாள்.*

***" 'நீர் போய், சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச்செய்து, மூன்றுநாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, எனக்காக உபவாசம்பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் உபவாசம்பண்ணுவோம்; இவ்விதமாக சட்டத்தை மீறி, இராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன்' என்று சொல்லச்சொன்னாள்." – எஸ்தர் 4:16***

*இராஜா எந்த நேரம் எப்படி இருப்பார் என்பது யாருக்கும் தெரியாது, அப்படிப்பட்ட நிலையில் எஸ்தர் உளப்பூர்வமாக இராஜாவைச் சந்திக்க விரும்பியிருப்பாள் என்று சொல்ல முடியாது, இருப்பினும் அவள் தனக்கிருக்கும் மாபெரும் பொறுப்பை உணர்ந்திருந்தாள் / ஏற்றுக்கொண்டாள். இது போன்ற இக்கட்டான சூழ்நிலையின்போது, தனக்கு என்ன நேரிடுமோ என்பது குறித்து வருத்தப்படுவதில் எந்தப் பயனும் இல்லை என்பதையும் அவள் உணர்ந்திருந்தாள். அதற்குப் பதிலாக, அவள் தன் மனதில் இருந்த எல்லா சந்தேகங்களையும் தூக்கியெறிந்துவிட்டு, கர்த்தர் தனக்கு முன்பாக வைத்த பாதையில் தொடர்ந்து முன்னேறி, வெற்றியும் அடைந்தாள்.*

## சரியானதைச் செய்தல்

*மீண்டும் ஒருவிசை, இக்கட்டான / உபத்திரவமான சூழ்நிலைகள் மத்தியிலும் சரியானதைச் செய்வது எப்படி என்பதற்கான பாடத்தை எஸ்தரிடமிருந்தும் நாம் கற்றுக் கொள்கிறோம்.*

இயேசு, **"முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத் தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்" (மத்தேயு 6:33, 34)** என்று கூறினார். அந்தந்த நாளுக்கு அந்தந்த நாளுக்குரிய பிரச்சனைகள் இருக்கவே செய்கின்றன. எனவே, இன்றைக்கு எது சரியோ அதை செய்யுங்கள்.

நம்மை குறித்துள்ள கர்த்தருடைய சித்தம் என்ன என்பதை அறிந்துகொள்ள நாம் போராடுகிறோம்/சிரமப் படுகிறோம் என்பது உண்மைதான். அவ்வேளைகளில் நாம் நமக்கு முன்னுள்ள கதவுகளைத் திறக்க முயற்சிப்போம், சில சமயங்களில் அவை திறக்கின்றன, சில சமயங்களில் அவை திறப்பதில்லை. இருப்பினும், நம் கட்டுப்பாட்டை மீறிய சூழ்நிலைகளால் நாம் சூழப்பட்டுள்ளோம் என்பதாக நாம் உணரும்போது, அவற்றிற்கு எதிராக முறுமுறுக்கவோ அல்லது போராடுவதோ நமக்கு எந்தப் பயனும் அளிக்காது என்பதை நாம் மனதில் வைக்க வேண்டும்.

எஸ்தரை எடுத்துக்கொள்ளுங்கள், அவள் முறுமுறுத்ததாக நமக்குச் சொல்லப்படவில்லை. மாறாக, அவள் செயல் படுவதற்கு முன்பாக, கர்த்தரிடம் ஜெபம் செய்தாள். நாமும் அதையே செய்ய வேண்டும். நாம் எத்திசையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்? அல்லது தேவனுடைய சித்தம் என்ன? என்பதை அறிந்துகொள்ள முயற்சிக்கும்போது, குறிப்பாக சவாலான அனுபவங்களை எதிர்கொள்ளும்போது, நாம் முதலில் தேவனிடம் ஜெபம் செய்ய வேண்டும் – இது மிகவும் முக்கியம். கர்த்தருடைய சித்தம் தெளிவாகும்போது, முறுமுறுக்காமல் அல்லது யோசித்துக்கொண்டே இருக்காமல் / தயக்கம் காண்பிக்காமல், 'தேவன் இக்காரியத்தை மேற்பார்வையிட்டு, நம்மை காத்துக்கொள்வார்' என்று அவர்மேல் நம்பிக்கைவைத்து முன்னோக்கி நகர வேண்டும்.

# யோனா

‘நடப்பட்ட இடத்தில் வளர்ந்து மலருங்கள்’ எனும் தலைப்பிற்கு, யோனாவின் உதாரணம் சரியாகப் பொருந்தி வராது என்பது உண்மைதான். ஆனால் **யோனாவோ தேவன் தன்னை நடுவதற்கு விரும்பிய இடத்தையே தவிர்க்க முயன்றார்.** தேவனுடைய சித்தத்திற்கும், அவருடைய திட்டத்திற்கும் எதிராகப் போராடியதற்கு வேதாகமம் நமக்குக் கொடுக்கும் மிகச்சிறந்த உதாரணம் – யோனா. தேவன் யோனாவை நினிவேயில் நாட்டும் முடிவில் இருந்தார், ஆனால் யோனாவோ அங்கு நடப்பட விரும்பவில்லை!

நினிவே ஜனங்களுக்குப் பிரசங்கிக்கும்படிக்கு யோனாவை தேவன் வழிநடத்தினார். ஆனால் யோனாவோ அவர்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கத் தகுதியற்றவர்கள் என்றும், அவர்கள் அழிக்கப்பட வேண்டியவர்கள் என்றும் நினைத்தார். இந்த மனப்பான்மையால் அவர் தன்னையே அவர்களை நியாயந்தீர்க்கும் நியாயாதிபதியாக உயர்த்திக் கொண்டார். பாவஞ்செய்யும் ஜனங்களுக்கு எதிராக தன்னுடைய சொந்த நியாயத்தீர்ப்பை / நிதானிப்பை கைவிடுவதே யோனா முன்பாக வைக்கப்பட்ட சோதனையாக இருந்தது.

நம்மை எடுத்துக்கொள்ளலாம், நாம் என்றைக்காவது தேவனுடைய வழிகாட்டுதலுக்கு எதிராக போராடியுள்ளோமா அல்லது போராடுகிறோமா? தேவன் ஒரு திசையில் செல்ல விரும்ப, நாம் வேறு திசையில் செல்ல விரும்புகிறோமா? தேவனுடைய நியாயந்தீர்க்கும் வேலையை நமது கையில் எடுத்துக்கொள்ளும் தூண்டுதல் நமக்குள் என்றேனும் ஏற்பட்டுள்ளதா?

மற்றவர்களுடைய குணாதிசயம் மற்றும் உள்நோக்கங்கள் குறித்து நாமே கற்பனையாக அனுமானிப்பது என்பது மனித சுபாவத்தின் ஓர் அம்சமாகும் – இதையே யோனாவும் வெளிப்படுத்தினார். மற்றவருடைய இருதய மனப்பான்மையை, எண்ணங்களை அறிவோம் என்று நம்புவது

*சுலபம். ஆனால், மற்றவர்களை நியாயந்தீர்க்கும் இந்தச் சோதனைக்கு நாம் அடிபணியக்கூடாது மற்றும் தேவன் நம்மை வழிநடத்தும் திசையை எதிர்த்துப் போராடக்கூடாது என்பவைகளே யோனாவிடமிருந்து நமக்குக் கிடைக்கும் பாடங்களாகும். நமக்குத் தேவையான கருவிகளும், தாலந்துகளும், வாய்ப்புகளும் நமக்கு அருளப்படும். அவற்றைப் பயன்படுத்தி, நம்மால் முடிந்த சிறப்பானதைச் செய்வது மட்டுமே நமது வேலையாகும். தேவன் தமது பங்கைச் சிறப்பாக செய்வார்– நாம் அதில் தலையிட வேண்டியதில்லை!*

## யோசேப்பு

*அடுத்து, நாம் யோசேப்பைப் பற்றிப் பார்க்கப் போகிறோம். அவர் தனது சகோதரரை விடவும் முற்றிலும் மாறுபட்டவராகவும், சொப்பனம் காண்பவராகவும் காணப் பட்டார். இப்படியாக அவர் தான் கண்ட சொப்பனத்தை அவர்களோடு பகிர்ந்துகொண்டபோதெல்லாம், அவர்கள் அவரைக் கேலி செய்யவும், அதிகமதிகமாய்ப் பகைக்கவும் செய்தார்கள். ஒரு கட்டத்தில் அவரது தந்தை கூட அவரை உதாசீனப்படுத்தினார்!*

***“ யோசேப்பு ஒரு சொப்பனம் கண்டு, அதைத் தன் சகோதரருக்கு அறிவித்தான்; அதினிமித்தம் அவனை இன்னும் அதிகமாய்ப் பகைத்தார்கள். அவன் அவர்களை நோக்கி: நான் கண்ட சொப்பனத்தைக் கேளுங்கள்: நாம் வயலில் அறுத்த அரிகளைக் கட்டிக்கொண்டிருந்தோம்; அப்பொழுது என்னுடைய அரிக்கட்டு நிமிர்ந்திருந்தது; உங்கள் அரிக்கட்டுகள் என் அரிக்கட்டைச் சுற்றி வணங்கி நின்றது என்றான். அப்பொழுது அவன் சகோதரர் அவனைப் பார்த்து: நீ எங்கள்மேல் துரைத்தனம் பண்ணுவாயோ? நீ எங்களை ஆளப்போகிறாயோ? என்று சொல்லி, அவனை அவன் சொப்பனங்களின் நிமித்தமும், அவன் வார்த்தைகளின் நிமித்தமும் இன்னும் அதிகமாய்ப் பகைத்தார்கள். அவன் வேறொரு சொப்பனம் கண்டு, தன் சகோதரரை நோக்கி: நான் இன்னும் ஒரு சொப்பனத்தைக் கண்டேன்; சூரியனும் சந்திரனும் பதினொரு நட்சத்திரங்களும்***

***என்னை வணங்கினது என்றான். இதை அவன் தன் தகப்பனுக்கும் தன் சகோதரருக்கும் சொன்னபோது, அவன் தகப்பன் அவனைப் பார்த்து: நீ கண்ட இந்தச் சொப்பனம் என்ன? நானும் உன் தாயாரும் உன் சகோதரரும் தரைமட்டும் குனிந்து உன்னை வணங்க வருவோமோ? என்று அவனைக் கடிந்துகொண்டான்." – ஆதியாகமம் 37:5 – 10***

*யோசேப்பு தான் காணும் இந்தச் சொப்பனங்கள் விசேஷமானவை என்பதை அறிந்திருந்தார். இந்த ஆழமும் அழுத்தமுமான சொப்பனங்களை தன் சகோதரருக்குத் தெரிவித்தபோது, அவர் அவர்களால் பரியாசம்செய்யப்பட்டார் – இது யோசேப்புக்கு எவ்வளவு கஷ்டமாக இருந்திருக்கும்! பிறகு, தனது தந்தையாலும், உதாசீனப்படுத்தப்பட்டார் – இது இன்னும் எவ்வளவு கடினமாக இருந்திருக்கும்.*

*இப்படியாக, பகையினிமித்தம் தீண்டப்பட்ட யோசேப்புடைய சகோதரர்கள், இரக்கமற்ற முறையில், அவரை அடிமையாக விற்றுப்போட முனைந்தார்கள். இப்படியாக நன்கு பராமரிக்கப்பட்ட பிரியமான குமாரனாக இருந்த அவருடைய வாழ்க்கையானது விரைவிலேயே ஓர் அடிமையின் வாழ்க்கையாக மாறிப்போனது. அவருக்கு எப்படி இருந்திருக்கும் என்பதை நினைத்துப்பார்க்கவே மிகவும் கடினமாக உள்ளது. நாம் இனி ஓர் அடிமையாக வாழ்ந்து மரிக்க*



வேண்டும் என்ற ஒரு சூழல் வந்தால், எப்படி இருக்கும் என்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள். ஒருவேளை மனம்தளர்ந்து விரக்தியின் உச்சத்திற்கே சென்று விடுவதற்குக்கூட வாய்ப்புள்ளது!

இருப்பினும், அவருடைய குணத்தையும், நடத்தையையும் வைத்து நாம் என்ன அனுமானிக்கலாம் என்றால், யோசேப்பு எதிர்காலத்தைக் குறித்து கவலை கொள்வதற்குப் பதிலாக, ஒவ்வொரு நாளையும், அது எந்த விதத்தில் வந்தாலும்சரி, அவ்வண்ணமாக அவற்றை எதிர்கொண்டார் (ஏற்றுக்கொண்டார்), அந்தந்தச் சூழ்நிலையில் தன்னால் என்ன செய்ய முடியுமோ அதனைச் சிறப்பாகச் செய்தார், தனக்கு கொடுக்கப்பட்ட பணிகளில் கூட சிறந்து விளங்கினார். உதாரணமாக, அவர் காரியசித்தியுள்ளவராகவும், மிகவும் உண்மையுள்ள ஊழியனாகவும் இருந்த காரணத்தினால், போத்திபாருடைய வீட்டுக்கே விசாரணைக்காரனாக வைக்கப்பட்டார். தெய்வீக மேற்பார்வை அவர்மேல் இருந்தது. அதோடுகூட, அவருடைய சொந்த குடும்பத்தாரைத் தவிர, மற்றப்படிக்கு அவர் எங்கு சென்றாலும், விசேஷமானவராக அடையாளம் காணப்பட்டார்.

இது நமக்கு, “**இயேசு அவர்களை நோக்கி: 'தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் இனத்திலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான்' என்றார்**” எனும் **மாற்கு 6:4**ஆம் வசனத்தை ஞாபகப்படுத்துகிறது.

ஆனால், மோசமான நாள் ஒன்று அவர் வாழ்வில் இடைப்பட்டது. அவர் தான் செய்யாத குற்றத்திற்காக, தனது எஜமானரின் மனைவியால் குற்றம் சாட்டப்பட்டார். அவரோ எஜமானியின் தவறுக்குத் துணை போகவில்லை, இதனிமித்தம் அநியாயமாக சிறையில் அடைக்கப்பட்டார். தனக்கிழைக்கப் பட்ட அந்த அநியாயத்தையும் சகித்துக்கொண்டார். ஆனால் சிறையிலும் அவர் தனது விசுவாசத்தையும் நேர்மறையான கண்ணோட்டத்தையும் கைவிடவில்லை. அவரது நேர்மை மீண்டும் ஒருமுறை கவனிக்கப்பட்டது, இதனிமித்தம் அவர் சிறைச்சாலை அதிகாரியின் பார்வையில் தயவுகிடைக்கப்

பெற்று, சகல கைதிகளுக்கும் மேல் பொறுப்பாளனாக வைக்கப்பட்டார். இது சிறையில் அடைக்கப்பட்ட பார்வோனின் பானபாத்திரக்காரருடனும் சுயம்பாகியுடனும் யோசேப்பைத் தொடர்பு கொள்ள வழிவகுத்தது. அவர்களின் சொப்பனங்களைச் சரியாக விளக்கிய பிறகு, பல காலங்கள் கழித்து, இறுதியில் பார்வோன் முன்பாக அழைத்துச் செல்லப்பட்டார்.

வரவிருக்கும் பஞ்சத்தைக் குறிக்கும் பார்வோனின் சொப்பனத்தை விளக்கினதன் மூலம், எகிப்தின் பொருளாதாரத்தின் பெரும்பகுதியை நிர்வகிக்கும் பொறுப்பு யோசேப்புக்கு வழங்கப்பட்டது. இது ஒரு சுபாவ மனுஷனுக்கு எப்பேர்ப்பட்ட கண்ணிகளை முன்வைக்கும் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். மாபெரும் இறுமாப்பு, அதிகார வெறி போன்ற கண்ணிகளில் சிக்க வாய்ப்புள்ளது. ஆனால் யோசேப்போ அவற்றில் சிக்கவில்லை.

இப்படியாக, பஞ்சம் கானான் தேசத்தில் பரவியபோது அவரது குடும்பத்தினரும், உணவு வாங்க வந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, பழிவாங்கும் நோக்கத்தில், அவர்களைத் தண்டிக்க அவர் முயற்சிக்கவில்லை. அவர் மனதில் கோபமோ பழிவாங்கும் எண்ணமோ வெளிப்படவில்லை. மாறாக, தன் தகப்பனோடும் சகோதரரோடும் மீண்டும் ஒன்றுசேரவே விரும்பினார்.

இந்த அனைத்து சம்பவங்களின்போதும், யோசேப்பு முன்பாக வெவ்வேறு பாதைகள் / தெரிவுகள் முன்வைக்கப் பட்டன. அவர் எப்போதுமே மோசமான பாதைகளைத் தெரிவுசெய்யாமல், மாறாக, தனது வாழ்க்கையின் ஒவ்வொரு அடியிலும் கருணையுடனும் கண்ணியத்துடனுமே நடந்து கொண்டார். அவர் அழுதுபுலம்பினதாகவோ அல்லது மனச்சோர்வடைந்ததாகவோ நமக்குக் கூறப்படவில்லை. ஒரு சாதாரண சிறுவனாக இருப்பதிலிருந்து, பல இன்னல்களைத் தாண்டி, பார்வோனுக்கு அடுத்த பதவியில் அமர்த்தப் பட்டதுவரைக்கும் நடந்த அனைத்தையும் வைத்துப் பார்க்கையில், அவர் தனது தனிப்பட்ட வாழ்க்கை பயணத்தின்

*ஒவ்வொரு அடியிலும், மெச்சிக்கொள்ளும் வகையில் வாழ்ந்துள்ளார் என்றே நம்மால் சொல்ல முடியும். தனது சூழ்நிலைகள் தன்னை கட்டுப்படுத்த / மேற்கொண்டுவிட அவர் அனுமதிக்கவில்லை. அவருக்குக் கிடைத்த மேன்மை யனைத்தும் சுயபச்சாதாபத்தினாலோ அல்லது 'அப்படி நான் என்ன தவறு செய்துவிட்டேன் என்று எனக்கு இப்படிப்பட்ட ஒரு கடினமான சூழ்நிலை' என்று பின்னோக்கிப் பார்த்து வருந்தியதாலோ ஏற்படவில்லை.*

## எனக்கு ஐயோ!

*நாமும் இந்த யோசேப்பைப் போல் வாழ்வதற்கு முயற்சிப்போமாக. உதாரணத்திற்கு, நாம் என்றைக்காவது, "**எனக்கு ஐயோ**" அல்லது "**கடவுள் ஏன் எனக்கு இதெல்லாம் நடக்க அனுமதிக்கிறார்?** " என்று நினைக்கும் கண்ணியில் அகப்பட்டுவிடுகிறோமா? யோசேப்பு நமக்குச் சிறந்ததொரு முன்மாதிரியாக விளங்குகிறார். என்ன செய்யலாம் என்றால், நம் சூழ்நிலையை மிதமிஞ்சி ஆராய்ந்து பார்ப்பதை நிறுத்திவிட்டு, நம்மேல் அனுமதிக்கப்பட்ட பணியைக் கையில் எடுத்துக் கொண்டு, அதனைச் செவ்வனே செய்து முடிக்க முயற்சிக்க வேண்டும்.*

*போத்திப்பாருக்கு வேலைசெய்வது, சிறைச்சாலையில் பணியாற்றுவது என்பது போன்று நாம் விரும்பித் தேர்ந்தெடுக்காத ஒரு சூழலில் நாம் பணியாற்ற அனுமதிக்கப்படும்போது, நாம் யோசேப்பைப் போல முழு பெலத்தோடே செய்கிறோமா?*

***பிரசங்கி 9:10 – "செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய். ..."***

*சில சமயங்களில் நம்மை மற்றவர்கள் மோசமாக நடத்துவார்கள். சில சமயங்களில், நமது கட்டுப்பாட்டுக்கு மீறிய சூழ்நிலைக்கு நாம் பலிகிடா ஆக்கப்படுவோம்.*

*காரியங்கள் நமக்குச் சாதகமாக வேலைசெய்யும்*

சமயங்களில், 'எல்லாம் நன்றாக சென்றுகொண்டிருக்கிறது' என்று மட்டுமீறி அதிலேயே இலயித்து, திளைத்திடும் சோதனையும் காணப்படுகிறது. உதாரணத்திற்கு யோசேப்பின் விஷயத்தில், போத்திபார் வீட்டில் ஒரு நல்ல பதவிக்கு உயர்த்தப்பட்டார், பிற்பாடு, எகிப்தில் எல்லாருக்கும் மேலாக உயர்த்தப்பட்டார். ஆனால் அவரோ இந்த உயர்வுகள் தன் கண்ணை மறைப்பதற்கோ, தன் நிதானத்தை இழக்கச் செய்வதற்கோ அனுமதியாமல், அவற்றினால் வரும் எந்தக் கண்ணியிலும் சிக்கிக்கொள்ளாமல் தன்னைக் காத்துக்கொண்டார். நாமும் இம்மாதிரியான சோதனைகளுக்கு எதிராக நம்மை காத்துக்கொள்ள வேண்டும்.

மறுபுறம், காரியங்கள் நமக்குச் சாதகமாக வேலை செய்யாத தருணங்களில், நாம் சிறுபிள்ளைத்தனமாக முதிர்ச்சியில்லாமல் எதிர்வினையாற்றுவதற்கு வாய்ப்புள்ளது – நாம் தேர்ந்தெடுத்த தெரிவுகளையும் (choices), முடிவுகளையும் (decisions) சீர்தூக்கிப் பார்க்காமல், பிறர்மேல் பழி போட வாய்ப்புள்ளது அல்லது 'நான் பலிகிடா ஆகிவிட்டேன்' என்பது போன்ற மனநிலையில் சிக்கவும் வாய்ப்புள்ளது. இது எதுவுமே நமக்குப் பயன் தரப்போவதில்லை. மாறாக, நமக்குப் பின்னடைவை மாத்திரமே ஏற்படுத்தும். ஒருவேளை யோசேப்பு இம்மாதிரியெல்லாம் நடந்திருந்தால், அவருக்குத் தொடர்ச்சியாக வெற்றி கிடைத்திருக்குமா? இல்லை அல்லவா!

ஆக, வெற்றி என்பதன் மீதான நமது கண்ணோட்டம் மாறினால் போதும், எல்லா சூழ்நிலைகளிலும் நாம் வெற்றியடையலாம் அன்பர்களே. என்னவெனில், நமது பார்வைக்கு எது சிறந்ததோ அதில் வெற்றிபெறுவது என்பது வெற்றி ஆகாது, மாறாக தேவன் நமக்காக வைத்திருக்கும் அவரது சித்தம் மற்றும் திட்டத்தை நிறைவேற்றுவதே, அவர் அனுமதிக்கும் சூழ்நிலையில் ஒப்புக்கொடுத்து செயல்படுவதே நமது வெற்றியாகும். யோசேப்பும் அதையே செய்தார். வெற்றியும் கண்டார்.

தேவனுடைய சித்தம் செய்வதில் நாம் முழு கவனத்தோடும் அர்ப்பணிப்போடும் இருக்கும்போது, நாம்

*தோல்வியடைய மாட்டோம், ஏனென்றால் இறுதியில் நமக்கு ஆசீர்வாதம் கொண்டு வரும் விதமாக தேவன் தமது பங்கைச் சிறப்பாக செய்திடுவார். பிதாவாகிய தேவனுக்கு நமது பூமிக்குரிய வெற்றியை விட நமது ஆவிக்குரிய வெற்றியே மிகவும் முக்கியமானதாய் இருக்கிறது. தேவனை நம் வாழ்க்கையில் நேரடியாக செயல்பட நாம் அனுமதிக்கும் பட்சத்தில், ஒரு பெரிய மற்றும் ஞானமான வெற்றி அடையப்படும்.*

## பவுல்

*அடுத்து, அப்போஸ்தலனாகிய பவுலைப் பற்றிப் பார்க்கலாம். அவருக்கு ஏதேனும் பாடுகள் இருந்தனவா? ஆம் இருந்தன. உதாரணத்திற்கு ஒரு காரியத்தை எடுத்துக் கொள்ளலாம்.*

*நீங்கள் குற்றவாளிகளை, பாவிகளை முழு மனதோடு துன்புறுத்திக்கொண்டிருக்க, பிற்பாடு உங்கள் பக்கம் தான் தவறு உள்ளது என்று உணர்த்தப்படுகிறீர்கள், அப்போது உங்கள் மனநிலை என்னவாக இருக்கும்? சற்று யோசித்துப் பாருங்கள்! இப்படிப்பட்ட நிலைதான் அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கையிலும் ஏற்பட்டது.*

***“ சவுல் என்பவன் இன்னுங் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்; இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெபஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான்.” – அப்போஸ்தலர் 9:1 – 2.***

***“முன்னே நானும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்கவேண்டுமென்று நினைத்திருந்தேன். அப்படியே நான் எருசலேமிலும் செய்தேன். நான் பிரதான ஆசாரியர்களிடத்தில் அதிகாரம் பெற்று, பரிசுத்தவான்களில் அநேகரைச் சிறைச்சாலைகளில்***

***அடைத்தேன்; அவர்கள் கொலை செய்யப்படுகையில் நானும் சம்மதித்திருந்தேன். சகல ஜெபஆலயங்களிலும் நான் அவர்களை அநேகந்தரம் தண்டித்து, தேவதூஷணஞ் சொல்லக் கட்டாயப்படுத்தினேன்; அவர்கள்பேரில் மூர்க்கவெறி கொண்டவனாய் அந்நியபட்டணங்கள் வரைக்கும் அவர்களைத் துன்பப்படுத்தினேன்." – அப்போஸ்தலர் 26:9 – 11.***

*எவ்வாறு இதனைக் கடந்து வாழ்வது? ' அச்சச்சோ மன்னியுங்கள் என் தவறு தான்' என்று வார்த்தையில் சொன்னாலும்கூட, யதார்த்தத்தில் அது மனதிற்கு மிகவும் வலி உண்டுபண்ணுவதாக இருக்குமல்லவா? ! தான் செய்த தவறு குறித்த இப்பேர்ப்பட்ட உய்த்துணர்வினை அடைந்த பிறபாடு, அதனைப் பின்தொடர்ந்து வரக்கூடிய அவமானத்தையும் குற்ற உணர்வையும் சற்று கற்பனை செய்து பாருங்கள்.*

*இது போதாதென்று, நீங்கள் துன்புறுத்திய, உங்களை வெறுக்கின்ற, உங்களை நம்பாத அதே ஜனங்களிடம் சென்று, உங்கள் வாழ்நாளெல்லாம் அவர்களுக்கு உறுதுணையாக வாழ்ந்து, உபதேசமும் போதனையும் செய்து, அன்பு காட்டி, அறிவுரை கூற வேண்டும் என்கிற நிலையும் ஏற்படுகிறது! இதுதான் அப்போஸ்தலனாகிய பவுலுக்கும் ஏற்பட்டது!*

*இது ஒருபுறம் இருக்க, மறுபுறம், (உரோம அரசாங்கம், யூதர்கள் என) கிறிஸ்தவர் அல்லாதவர்களிடமிருந்து வந்த துன்புறுத்தலையும் அவர் சகிக்க வேண்டியிருந்தது. இந்தப் பாடுகள் கஷ்டங்கள் மத்தியில், பவுல் சோர்ந்துபோய், பிரச்சனையில்லாத இடம் எங்கேனும் இருந்தால் அங்கே ஓடிப்போய் தங்கிவிடலாம் என்று நினைத்தாரா? இல்லை, பவுல் அவ்வாறு செயல்படவில்லை. அவர் உண்மையில் கிறிஸ்துவைத் துன்புறுத்தினார், ஸ்தேவான் இரத்தம் சிந்தப்படுகிறபோது, அங்கே அருகே நின்று, அவரைக் கொலை செய்ய சம்மதித்து, அவரைக் கல்லெறிந்தவர்களுடைய வஸ்திரங்களைக் காத்துக்கொண்டிருந்தார், சிறையில் அடைக்கப்பட்டார், கப்பற்சேதத்தில் சிக்க நேர்ந்தது – இவற்றையெல்லாம் எண்ணி எண்ணி அவர் மனச்சோர்வடைந்து முடங்கிப்போய்விடவில்லை.*

*பாடுகள், அநியாயமான சிறைவாசம் என்பது போன்ற எந்தச் சாதகமற்ற சூழ்நிலையிலும் அவர் மனம் தளர்ந்து, தனது கடமைகளிலிருந்து பின்வாங்கவில்லை. மனங்கசந்து அழுது புலம்பி, தேவனைச் சபிக்கவுமில்லை. நாம் அறிந்த வரைக்கும், அவர் தனது ஓட்டத்தில் இலக்கை நோக்கி நிற்காமல் ஓடிக்கொண்டிருந்தார் என்றே பார்க்கிறோம். அவர் ஒருபோதும் நற்செய்தியைப் பிரசங்கிப்பதை நிறுத்தவில்லை. அவர் தனது கடைசி மூச்சு வரைக்கும், தேவனுக்கு ஊழியம்செய்வதிலும், தன்னுடைய நன்னடத்தை மூலமாக தேவனை மகிமைப் படுத்துவதிலும் கடினமாக பிரயாசப்பட்டார், போராடினார். இதுகுறித்து நாம் அவருடைய வார்த்தைகளில் வாசிக்கலாம் –*



***“ இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம். நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிற தில்லை; துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை. கர்த்தராகிய***

***இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம். எப்படியெனில், சாவுக்கினமான எங்கள் மாம்சத்திலே இயேசுவினுடைய ஜீவனும் விளங்கும்படிக்கு உயிரோடிருக்கிற நாங்கள் எப்பொழுதும் இயேசுவினிமித்தம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறோம். இப்படி மரணமானது எங்களிடத்திலும், ஜீவனானது உங்களிடத்திலும் பெலன் செய்கிறது." (2 கொரிந்தியர் 4:7 – 12).***

*எப்பேர்ப்பட்ட வேதப்பகுதி! '**நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை!**'*

*நாம் தவறு செய்துவிட்டோம் அல்லது தவறு செய்து கொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்த பிறகு, நமது மதிப்புமிக்க நேரத்தையும் ஆற்றலையும் குற்றவுணர்வில் உளன்றுகொண்டிருக்க செலவழிக்கிறோமா அல்லது பவுல் செய்ததுபோல, தேவனிடம் மனப்பூர்வமாக மன்னிப்புக் கேட்டுவிட்டு, சரியான பாதையில் முன்னோக்கி நகர்கிறோமா? சொல்வது எளிது செய்வது கடினம் என்பது உண்மைதான் என்றாலும், முயற்சி திருவினையாக்கும் என்பதை மறந்துவிட வேண்டாம் அன்பர்களே.*

*இதுகுறித்து ஆறுதலான வார்த்தை **1 யோவான் 1:9**ஆம் வசனத்தில் காணப்படுகிறது: "**நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.**"*

*எனவே, நாம் பாடுகளையோ, உலகத்தினால் முன் வைக்கப்படும் தடைகளையோ எதிர்கொள்ளும்போது, நாம் மனம்தளர்ந்து பின்வாங்கிவிடக்கூடாது. இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், அந்தத் தடை கர்த்தரிடமிருந்து வந்ததா அல்லது உலகத் தலையீட்டிலிருந்து வந்ததா அல்லது உலகப்பிரகாரமான கவனச்சிதறலால் உண்டானதா என்பதை கூர்ந்து ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆனால் இதனை நம்மால்*

அவ்வளவு சுலபமாக வேறுபடுத்திப் பார்க்க முடியாது. அதற்கு நமக்கு இருக்கும் ஒரே வழி ஜெபம்செய்வதாகும்.

நாம் நம்முடைய சூழ்நிலையைக் குறித்து தேவனிடம் முதலில் ஜெபிக்க வேண்டும், பிற்பாடு 'பரிசுத்த ஆவியின் மேம்பட்ட கண்ணோட்டத்தையும் வழிகாட்டுதலையும் பெற்றுக் கொள்வோம்' என்கிற நம்பிக்கையோடு சத்தியத்திற்குள் காணப்படும் சகோதர சகோதரிகளுடன் கலந்தாலோசிக்க வேண்டும். ஒரு தெளிவான பார்வை கிடைக்கும். அதன்பிறகு நாம் நம்மிடம் இருப்பதை வைத்து சிறப்பாகவும் சரியாகவும் செயல்பட வேண்டும்.

வர்த்தக உலகில் இதற்குச் சம்பந்தமான ஒரு சொலவடை உள்ளது : *"**Strong Opinions, But Weakly Held.**" (இதன் அர்த்தம்: ஒரு விஷயத்தில் / பிரச்சினையில் முடிவெடுக்கும்போது அதில் உங்களுக்குத் தெரிந்த கருத்துகளை வைத்து ஓர் உறுதியான முடிவுக்கு வாருங்கள் (Strong Opinions), ஆனால் எந்தக் கருத்துமே முற்றிலும் சரியாக இருக்குமென்று சொல்ல முடியாது, குறைபாடுகள் இருக்க வாய்ப்புள்ளது என்கிற காரணத்தினால், 'தவறு/குறைபாடுடையது' என்று தெரியவரும் நம்முடைய கருத்துகளையும், கண்ணோட்டத்தையும் சீர்ப்படுத்திக்கொள்ளும் பக்குவமும் இருக்க வேண்டும் (But Weakly Held).)*

இந்த வகை அணுகுமுறை வளர்ச்சியை நோக்கி நம்மை வழிநடத்தும். இயல்பாகவே, எல்லா நேரங்களிலும் தேவையான அனைத்து தகவலும் கிடைக்கப்பெற்று, ஒரு கச்சிதமான / மிகச்சரியான முடிவினை (perfect decision) நம்மால் எடுக்க முடியும் என்று சொல்ல முடியாது. அதுதான் நிதர்சனமும்கூட! நம்மால் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் கச்சிதமான முடிவுகளை எடுக்க முடியும் என்று நமது பரமபிதாவும்கூட, நம்மிடம் எதிர்பார்ப்பதில்லை. மாறாக, நமக்கு அருளப்பட்டதை வைத்து நாம் எவ்வளவு சிறப்பாக, சரியாக செயல்படுகிறோம் என்றே எதிர்பார்க்கின்றார்.

பரிசுத்த ஆவியின் அறிவொளி கிடைக்கப்பெற்ற மனச்சாட்சியின் வழிகாட்டுதல்மேல் நம்பிக்கை வைத்து நாம் தொடர்ந்து முன்னேறலாம்! ஆனால் நாம் ஏற்கெனவே

*பார்த்த சொலவடைபடி, நாம் திறந்த மனதுள்ளோராய்க் காணப்பட வேண்டும், நமது சொந்த கருத்துகள் குறைபாடுடையதாக காணப்பட வாய்ப்புள்ளது, ஆகையால் நமது நிதானிப்பையும் புரிதலையும் மேம்படுத்த தீவிரமாக முயற்சிக்க வேண்டும்.*



*உதாரணத்திற்கு, (முதலில் தவறான வைராக்கியத்தினால்) பவுலும்கூட மிகவும் உறுதியான சொந்த கருத்துகளைக் கொண்டிருந்தார்;*

*ஆனால், தன்னிடம் தவறு உள்ளது என்பது சுட்டிக்காட்டப் பட்டவுடனேயே அவர் தனது பாதையை மாற்றியமைத்துக்கொண்டு, கிறிஸ்துவுக்குள்ளான புதிய மற்றும் மேம்பட்ட புரிதலுக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.*

*எனவே, தவறுவது மனித இயல்புதான் என்றாலும், நாம் செய்த தவறுக்கு எவ்வாறு எதிர்வினையாற்றுகிறோம், அவற்றிலிருந்து எவ்வாறு நம்மை சீர்ப்படுத்திக்கொள்கிறோம், அவற்றிலிருந்து எவ்வாறு வளர்கிறோம் என்பதே நமது வளர்ச்சிக்கான முக்கிய படிக்கற்களாய்க் காணப்படுகின்றன.*

***பிலிப்பியர் 3:13, 14 – "சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்."***

ஆம், நாம் எப்போதும் 'தேவனுடைய சித்தம் செய்யும் கிறிஸ்துவின் சாயல்' எனும் இலக்கை நோக்கியே தொடர வேண்டும் சகோதர சகோதரிகளே.

## யோசுவா

நாம் பார்க்கப்போகிற கடைசி முன்மாதிரி யோசுவா ஆவார். அவருக்கிருந்த பாடுகளை நாம் என்றேனும் யோசித்துப் பார்த்திருக்கிறோமா? பெரும்பாலும் இல்லை என்பதே பதிலாக வரும்.

ஏறக்குறைய 35 வயதுடைய யோசுவாவும் இன்னும் பலரும் கானான் தேசத்தை வேவு பார்ப்பதற்காக அனுப்பப் பட்டனர். ஆனால் பன்னிரண்டு வேவுகாரரில் யோசுவாவும் காலேப்பும் மட்டுமே, அந்தத் தேசத்தைக் கைப்பற்ற முடியும், கர்த்தர் துணைசெய்வார் என்று நம்பினார்கள். மற்ற பத்து வேவுகாரரும், அந்தத் தேசத்தில் வசிப்பவர்கள் இராட்சதர்கள் என்றும், அவர்களோடு ஒப்பிடுகையில் தாங்கள் வெட்டுக் கிளிகளைப் போல் இருந்தோம் என்றும் கூறியதால், மக்கள் பயந்து அந்தத் தேசத்திற்குள் நுழைய விரும்பவில்லை. விசுவாசமில்லாத இந்தச் செயலினிமித்தம் கிடைத்த தண்டனையாக, முழு தேசத்தாரும் 40 ஆண்டுகளளவும் சீனாய் வனாந்தரத்தில் அலைந்து திரிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

யோசுவாவிற்கு இது எப்பேர்ப்பட்ட அனுபவமாக இருந்திருக்க வேண்டும்? அவருடைய இடத்தில் உங்களை வைத்துப் பாருங்கள். நீங்கள் வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கே நேரில் சென்றுபார்த்து, அங்குள்ள ஐசுவரியத்தையும் வளத்தையும் கண்ணாரக்கண்டு வந்துள்ளீர்கள், அது ஜனங்களுக்கான நிரந்தரமான வீடாக மாறுவதற்கான சாத்தியமிருக்கிறது என்பதையும் நீங்களும் உங்கள் சகா ஒருவரும் உறுதியாக விசுவாசிக்கிறீர்கள். ஆனால், மற்றவர்களுடைய விசுவாசக் குறைச்சலால், அவர்களோடேகூட நீங்களும் 40 வருஷமளவும் அந்தத் தேசத்திற்குள் பிரவேசிக்கக்கூடாதபடிக்குத் தடைப் பண்ணப்படுகிறீர்கள். அதற்குப் பதிலாக நீங்கள் வனாந்தரத்தில்

சுற்றித் திரிந்து, அனுதினமும் மன்னாவையும், காடை உணவையும் உண்டு வாழ வேண்டும் எனும் நிலை. உங்கள் மனநிலை எப்படி இருக்கும்? குறைந்தபட்சம் கசப்புணர்வு / கோபம் / எரிச்சல் வெளிப்படும் அல்லவா?

யோசுவா இந்தச் சூழ்நிலைகளில் எவ்வாறு எதிர்வினையாற்றினார் என்பது குறித்து நமக்குச் சொல்லப் படவில்லை. இருப்பினும், அவரும் யோசேப்பைப் போல, தேவனோடு நெருங்கிய உறவுகொண்டிருந்தார் என்பதை வைத்துப் பார்க்கும்போது, நிச்சயமாக அவருடைய குணமும் நடத்தையும் முன்மாதிரியாகவே இருந்திருக்கும் என்று நாம் நம்பலாம்.

தேசத்தை வேவுபார்த்து வந்து சாட்சிசொன்னதில் காலேபும் யோசுவும் உண்மையுள்ளவர்களாய்க் காணப்பட்டனர். இந்தத் உண்மைத்தன்மையும், நற்குணமும் பின்னாட்களில், வாக்களிக்கப்பட்ட தேசத்தில், ஜனங்களுக்குத் தலைவனாக இருந்து அவர்களை வழிநடத்த அவருக்குப் பேருதவியாக இருந்தது. ஏறக்குறைய அவரது வாழ்க்கையின் இந்த 70+ ஆண்டுகள், பின்னாட்களில் ஒரு தலைவனாக உருவாவதற்கு அவரைத் தகுதிப்படுத்தியிருக்க வேண்டும்.

## தேவனுடைய கால அட்டவணை

யோசுவாவின் வாழ்க்கையிலிருந்து நாம் என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்? 40 ஆண்டுகாலமளவும் அவர் பொறுமையோடு இருந்தார் என்பதே ஒரு வியந்துபார்க்கும் விஷயமாக இருக்கிறது!

தேவனுடைய திட்டத்தின்படி நாம் சற்று காத்திருக்க வேண்டும் எனும் சூழ்நிலைகளின்போது நாம் பொறுமைக்காக்கிறோமா?

நாம் முன்னோக்கி நகர வேண்டிய பாதை நமக்கு முன்பாக மிகத்தெளிவாக தெரிகின்றபோதும், அதில் ஏதோ சில இடையூறு அனுமதிக்கப்படும்போது நாம் எரிச்சலும் சீற்றமும் அடைகிறோமா? அல்லது உடனடியாக சாந்தத்தோடு ' இது

ஏற்றசமயம் இல்லை போலும்' என்கிற முடிவுக்கு வருகிறோமா? நாம் காத்திருக்க வேண்டிய அந்தத் தாமதத்திற்கான காரணம் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஒருவேளை நாம் சில பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக நாம் காக்கவைக்கப்படலாம். இல்லையேல் வாழ்க்கையின் சிக்கல்களாலும், எதிர்பாராத சம்பவங்களாலும் கூட நாம் காக்கவைக்கப்படலாம். இப்படியாக காரணங்கள் எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டுமே! நாம் எப்போதும் மனரம்மியமாகவும், பொறுமையாகவும் எதிர்வினையாற்றுவதே சிறந்ததொரு வழியாக இருக்கும்.

நாம் என்றைக்காவது நமது குடும்பத்தினரோ அல்லது நமது நண்பர்களோ எடுக்கும் மோசமான முடிவுகளால் அல்லது தவறான நிதானிப்புகளால் பாதிக்கப்பட்டு, பலிகிடா ஆக்கப் பட்டுள்ளோமா? யோசுவாவிற்கும் அதுதான் நடந்தது. (மற்றவர்கள் செய்த தவறுக்காக தானும்) வனாந்தரத்திற்குத் திரும்பிச் செல்ல வேண்டியிருந்த சூழலில், யோசுவா மிகுந்த பொறுமையுடைவராய்க் காணப்பட்டிருக்க வேண்டும். அவர் முறுமுறுக்கவில்லை. எந்தக் கேள்வியும் கேட்காமல் தேவனுடைய சித்தத்தை முழு மனதாக ஏற்றுக்கொண்டார். நாம் தியானித்து ஆராய்ந்துபார்த்த மற்ற நபர்களைப் போலவே, யோசுவா பொறுமையுடன்கூடிய சகிப்புத்தன்மைக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறார்.

மற்றவர் செய்யும் ஏதோவொரு செயலினிமித்தமாக நாம் ஒரு சூழ்நிலைக்கு உள்ளாக்கப்படுகிறோமா? அது மோசமான சூழ்நிலையாக இருக்கும்பட்சத்தில் நாம் எவ்வாறு எதிர்வினை யாற்றுகிறோம்? ஓர் அனுபவம் வருகிறதென்றால், அதற்கு எப்படி எதிர்வினையாற்றுகிறோம் என்பது உண்மையில் நம் கையில்தான் உள்ளது, அது ஒரு சுயத்தெரிவாகும் (choice). ஓர் அனுபவம் விரும்பத்தகாததாக இருக்கும்போது, ஒருபுறம் நாம் இயல்பாகவே எரிச்சலையும் கோபத்தையும் வெளிப்படுத்த வாய்ப்புள்ளது. அல்லது, அந்த அனுபவத்தை, தேவன் மீதுள்ள நமது நம்பிக்கையையும் தைரியத்தையும் வெளிப்படுத்துவ தற்கான ஒரு வாய்ப்பாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

*சில சமயங்களில் ஏதோவொன்று நடக்க வேண்டும் என்பதற்காக நாம் அதிகமாகக் கவலைப்படுவோம். இருப்பினும், உடனடியாக முடிவுகள் அடையப்பட வேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்காமல், கர்த்தருடைய நேரத்திற்காகக் காத்திருப்பது விசுவாசத்தின் ஒரு பகுதியாக காணப்படுகிறது. பெரும்பாலும், ஒரு காரியம் தாமதம் ஆகும்போது, காத்திருப்பதிலும், மகிழ்ச்சியான இருதயத்தைக் கொண்டிருக்க முயற்சிப்பதிலும் மிகுந்த ஞானம் வெளிப்படுகிறது. தேவனுடைய கால அட்டவணைக்கு நம்மை அர்ப்பணிப்பது மிகப்பெரிய ஆசீர்வாதத்தையே நமக்கு வழங்கும்.*

*அப்போஸ்தலனாகிய யாக்கோபுடைய ஆலோசனைகள் இதற்குப் பொருத்தமாக இருப்பதுபோல் உள்ளது.*

***யாக்கோபு 4:13 – 15 : “மேலும், நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப் போய், அங்கே ஒருவருஷம் தங்கி, வியாபாரஞ்செய்து, சம்பாத்தியம் பண்ணுவோமென்கிறவர்களே, கேளுங்கள். நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே. ஆதலால்: ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்லவேண்டும்.”***

*ஆம், பெரும்பாலும், நிறைவேறாத எதிர்பார்ப்புகள் நிமித்தமாகவே எரிச்சலும் கோபமும் ஏற்படுகின்றன. எதிர்பார்ப்புகளே இருக்கக்கூடாது என்று நான் (பேச்சாளர்) சொல்ல வரவில்லை. மாறாக எதிர்பார்ப்புகளைக் கட்டுக்குள் வைக்கப் பழகிக்கொண்டோமேயானால், நாம் மாம்சப் பிரகாரமாக எதிர்வினையாற்றுவதை படிப்படியாக குறைத்துக் கொண்டு, ஆவிக்குரிய நிதானத்தோடு எதிர்வினையாற்ற ஆரம்பித்துவிடுவோம்.*

*காரியங்கள் நமது விருப்பப்படி நடைபெறாதபோது, நமது விரலை மற்றவர்கள் பக்கம் நீட்டி, அவர்கள் மேல் பழிசுமத்தவும் குறைகூறவுமே மனசு துடிக்கும். ஆனால் நாம்*

அவ்வாறு செய்யக்கூடாது. பழிசுமத்துவதினாலோ, குறைகூறுவதினாலோ, முறுமுறுப்பதினாலோ யாருக்கும் எந்தப் பயனும் இல்லை அன்பர்களே. அதற்குப் பதிலாக, நாம் நடப்பட்ட இடத்தில் நம்மால் முடிந்த சரியான காரியங்களைச் சிறப்பாக செய்யவே நாம் முயற்சிக்க வேண்டும்.

தேவன் நம்மை எங்கு நாட்டியுள்ளோரா, அங்கேதானே நாம் வளரவும், மலரவும் வேண்டுமே ஒழிய, மாறாக இக்கரைக்கு அக்கரை பச்சையாக இருக்கிறதென்று, அக்கரைக்கு நம்மை நகர்த்திக்கொண்டு போகுமாறு தேவனிடம் நாம் பிடிவாதம் பிடிக்க முயலக்கூடாது.

சில சமயங்களில் தேவன் நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறார் என்பது நமக்குத் தெரிந்திருந்தாலும், அது சுலபமான பாதையாக நமக்குத் தென்படாது. அப்போது என்ன செய்ய வேண்டும்? கடினமான பாதையானாலும் பரவாயில்லை, முதலில் 'உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது' என்று தேவனிடம் ஜெபம்செய்துவிட்டு, ஓர் அடியை முன்னோக்கி எடுத்து வையுங்கள், பிறகு தேவன் பேரில் முழு விசுவாசம் வைத்து அடிமேல் அடிவைத்து, வாழ்க்கையில் தொடர்ந்து முன்னோக்கி நகருவதே சரியாக இருக்கும்.

'என்னவாகுமோ என்னவாகுமோ' என்று அதிகம் யோசித்துக்கொண்டே இருந்தால், அதிகபட்சம் தாமதம் ஏற்படும், குறைந்தபட்சம் ஒரே இடத்தில் தேங்கி நிற்கவே நேரிடும்.

## முடிவுரையான பாடங்கள்

பிரியமான சகோதர சகோதரிகளே, நமது அபூரணமான மனித சுபாவமானது பல சவால்களை எதிர்கொள்ளும். சில சமயங்களில், நமது திராணிக்கு மிஞ்சிய பல பிரச்சினைகளை ஒன்றாக சமாளிக்க வேண்டியிருப்பது போல் நிமைமை காணப்படும். அதற்கு இப்பாடங்கள் நமக்கு உதவியாக இருக்குமென்று விசுவாசிக்கிறோம். சரியான காரியங்களைச் சரியாக செய்த விசுவாச வீரர்கள் சிலருடைய முன்மாதிரியான வியத்தகு அனுபவங்களை இந்நேரம் வரை தியானித்தோம்.

இதன் மூலமாக நமது மாம்சத்தை அடக்கி, ஆவிக்குரிய வகையில் நம்பிக்கையோடு முன்னோக்கி நகர முயற்சி செய்யும்படிக்கு புத்துணர்ச்சியும் புதுப்பெலனும் கிடைக்கப் பெற்றிருப்போம் என்று நம்புகிறோம்.

ரூத், எஸ்தர், யோனா, யோசேப்பு, பவுல் மற்றும் யோசுவா என்பவர்களுடைய வாழ்க்கையை நாம் பார்த்த வரையில், நமது விசுவாசத்தையும் அர்ப்பணிப்பையும் நமது பரமபிதாவின்பேரில் வைப்பதே மிக முக்கியமான காரியம் என்று நினைவூட்டப்படுகிறோம்.

நம்மால் இயன்ற வழிகளிலெல்லாம் பிறருக்கு உதவிசெய்வதை தடைப்பண்ணும்படிக்கு நாம் இறுமாப்பு / தலைக்கனம் மிக்கவர்களாக இருக்கக்கூடாது. சில சமயங்களில், நமது சுயத்தை நஷ்டப்படுத்தியே, சரியானதைச் செய்ய வேண்டி இருக்கும். அதாவது நமது சுயத்தை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். அதற்கென்று, நமது வாழ்க்கையே முடிந்து போய்விட்டது என்று நாம் எண்ணிவிடக்கூடாது.

***“தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்” (மத்தேயு 10:39)*** என்றே வசனம் சொல்கிறது.

வாழ்க்கை கவலையற்றதாகவும் வலியற்றதாகவும் இருக்கும் என்று தேவன் வாக்களிப்பதில்லை. சிறுவயதிலேயே பெற்றோரை இழந்த எஸ்தரைப் போல, நமது வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே கஷ்டங்கள் காணப்பட்டாலும், வாழ்நாள் முழுவதும் நமக்கு இரக்கம் கிடைக்கும், நமக்குத் திரும்பத்திரும்ப வாய்ப்பு கிடைக்கும் என்று அர்த்தமாகிடாது. மாறாக, நம்முடைய வாழ்க்கையில், நம்மால் முடிந்தளவிற்குச் சிறப்பாக தேவனுடைய சித்தம் செய்துகொண்டே, பொறுமையோடு நமது வழியில் முன்னோக்கி நகர்ந்து செல்ல வேண்டும். சில சமயங்களில், நமக்கு வரும் மாபெரும் சோதனையானது உண்மையில் நம்மை மாபெரும் ஆசீர்வாதத்தை நோக்கி நகர்த்திக்கொண்டுபோகும் சோதனையாக இருக்கும்.

எப்பேர்ப்பட்ட சோதனைகளையும் துன்பங்களையும் நாம் சகிக்க நேர்ந்தாலும், அவற்றை இரக்கத்தோடும், கிருபையோடும், கண்ணியத்தோடும் சகிப்பது என்பது, நாம் வித்தியாசமானவர்கள் என்பதையும், தேவனுக்கு ஊழியம் செய்வதில் ஒருமனதாக கவனம் செலுத்துகிறோம் என்பதையும் மற்றவர்களுக்குக் காண்பிக்கும். நாம் எதற்காக இப்படிச் செய்கிறோம் என்பதை மற்றவர்களால் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும்கூட, இந்த நம்முடைய வித்தியாசமான நடத்தை மதித்துணரப்படும்.

மற்றவர்கள் முன்பாக நாம் கர்த்தருடைய ஜனங்களாக காணப்படுகிறோம், ஆகையால் நாம் குறைகூறவோ முறுமுறுக்கவோ கூடாது. அதற்குப் பதிலாக, யோசேப்பை நினைத்துக்கொள்ளுங்கள். அவருடைய வாழ்க்கையில் வித்தியாச வித்தியாசமான சோதனைகள் வந்தாலும், தொடர்ந்து அவர் தேவனுடைய சித்தம் அருமையாக நிறைவேறக்கூடிய ஸ்தானங்களிலேயும், இடங்களிலேயுமே நடப்பட்டார் என்பதை நினைவில்வையுங்கள். முடிவில் எகிப்திற்கு அதிபதியாக வைக்கப்படும் ஒரு நபர், அதற்கு முற்றிலும் சம்பந்தம் சம்பந்தமில்லாத ஸ்தானங்களிலும் இடங்களிலும் நடப்பட்டார் என்பது போல் தோன்றும். ஆனால் கடந்து வந்த அனுபவங்கள் எதுவுமே தற்செயலானதல்ல. இறுதி இலக்கை அடைவதற் கேதுவாகவே அவர் வழிநடத்தப்பட்டார் என்பதையும் நினைவில் வையுங்கள். நமக்கும்கூட இது பொருந்தும்.

எப்போதும் கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, ஜெபசிந்தையோடு உங்களால் முடிந்த சிறந்த முடிவுகளை/ தீர்மானங்களை எடுக்க பிரயாசப்படுங்கள். உங்கள் தவறுகளை எண்ணி எண்ணி மிகைப்படியாக குறைப்பட்டுக்கொண்டும், மனவருந்திக்கொண்டுமிருக்க வேண்டாம். மாறாக உங்கள் தவறுகளை உணர்ந்துகொள்ளவும், அவற்றிலிருந்து கற்றுக் கொள்ளவும், 'உங்கள் உண்மையான முயற்சிகளை தேவன் ஆசீர்வதிப்பார்' என்பதை உணர்ந்தவர்களாய் தொடர்ந்து முன்னேறவும் உறுதிபூண்டு கொள்ளுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் நமது கர்த்தர்பேரிலேயே நம்பிக்கை வைக்க

*வேண்டும். நாம் தேவனிடம் எதிர்பார்ப்பாதெல்லாம் அவருடைய வழிகாட்டுதலே! அவரும் நம்மிடம் எதிர்பார்ப்பா தெல்லாம் நம்மால் முடிந்த சிறப்பான முயற்சிகளையே! இதற்குமேல் நாமும் அவரிடம் எதையும் எதிர்பார்ப்பதில்லை, அவரும் நம்மிடம் எதையும் எதிர்பார்ப்பதில்லை!*

*எனக்குள் நான் வளர்த்த விரும்புகிற குணலட்சண பண்புகளை, இந்த முன்மாதிரிகள் அருமையாக வெளிப்படுத்தி வாழ்ந்து காண்பித்துள்ளனர். இவர்கள் எனக்கு ஊக்கம் அளித்ததுபோல உங்களுக்கும் ஊக்கம் அளிப்பார்கள் என்று விசுவாசிக்கிறேன்.*

*இறுதியாக அப்போஸ்தலனாகிய பவுல் அறிவுறுத்திய வார்த்தைகளை வாசித்து, இப்பாடத்தை நிறைவு செய்யலாம்:*

***பிலிப்பியர் 3:17 – "சகோதரரே, நீங்கள் என்னோடேகூடப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்."***

***திருவிவிலியம் – "சகோதர சகோதரிகளே, நீங்கள் அனைவரும் என்னைப்போல் வாழுங்கள். நாங்கள் உங்களுக்குக் காட்டிய முன்மாதிரியின்படி வாழ்பவர்களைப் பின்பற்றுங்கள்."***

*தேவன் தாமே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக.*
*ஆமென்!*

# மலர்ந்திருங்கள்...!

மலர் மற்ற மலருக்காய்ப் பூப்பதில்லையே;
கடுங்காற்றும் பேய்மழையும் ஓய்ந்துமே,
பின்இதழ் விரித்தே, கதிரவன் பார்த்தே விரிகின்றதே;
தேவ மகிமை பறைசாற்றிப் பூக்கின்றதே!
மகிமைப்படுத்தினேன் எனும் நிறைவில்
புவிதனில் விழுந்திடுதே!

நேசர் நேசிக்கும் லீலிபுஷ்பமே!
இராஜனுக்காகவே மலரும் சீயோனே!
சுடுநெருப்பும் கடும்புயலும் ஓய்ந்துமே,
அகம் மலர்ந்தே, நேயனுக்காய் விரிவாயே!
தேவ மகிமை பூரணமாய்க் கமழ்வாயே!
ஏற்றவேளையில் நேசரின் உற்ற கரம்
உன்னையும் பறித்திடுமே!



## இப்பாடத்திற்குச் சம்பந்தப்பட்ட சில வசனங்களுக்கான சகோ. ரசல் அவர்களுடைய விளக்கங்கள் (EBC)

### மத்தேயு 6:34 – "ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்."

**கவலைப்படாதிருங்கள்** – *நாளைக்காக மனக்கலக்கமும் பாரமுமான எந்தக் கவலையும் படாதிருங்கள். F572 கவனக்குறைவாகவோ/அசட்டையாகவோ (அ) கவலையே உருவாகவோ இராதேயுங்கள். F573*

**அதினதின் பாடு** – *அதினதின் சிரமம்/கஷ்டம். R5470:5 நாம் எதிர்பார்த்தது போல் நமது நம்பிக்கைகள்/எதிர்பார்ப்புகள் விரைவில் நிறைவேறவில்லை எனும்போது, நாம் கவலைப்பட வேண்டுமென்கிற அவசியமில்லை. நமக்கு சத்தியம் அருளப்பட்டுள்ளதே, மேலும் செய்ய வேண்டியதற்கு வேலை இருக்கின்றது. R5374:4*

**போதும்** – *கர்த்தருடைய வழிகாட்டுதலும் போதுமானதாயிருக்கிறது, மேலும் நாம் அதற்காக காத்திருந்து, கவனித்திருக்க வேண்டியிருக்கிறது. Q634: 1*

### பிரசங்கி 9:10 – "செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்; ..."

**உன் பெலத்தோடே** – *நாம் அனைவரும் கல்லறை நோக்கி விரைந்து சென்றுகொண்டிருப்பதால், நமக்கிருக்கும் தாலந்துகளுக்கும் வாய்ப்புகளுக்கும் ஏற்ப, கூடுமான நன்மைகளைச் செய்வதில் நாம் தீவிரமாக ஈடுபட வேண்டும். SM28:T இயற்கையான ஞானம், அறிவு, புரிதல், ஆலோசனை மற்றும் வலிமை என்பவை இல்லாமல் போகும்போது, அது சரீரப்பிரகாரமான மரணத்தைக் கொண்டுவருகிறது என்பதை சாலொமோன் இந்த வசனத்தில் எடுத்துக்காட்டுகிறார்; ஆவிக்குரிய ரீதியாகவும் இதுவே உண்மை. யாத். 30:23 – 24 ஆகிய*

*வசனங்களுக்கான விளக்கங்களைப் பார்க்கவும். R4093:5* எனவே விரைவாகச் செயல்படுங்கள்; காலம் குறைவாக இருக்கிறது. R5127:5*

***2 கொரிந்தியர் 4:8 – "நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை;"***

***திருவிவிலியம் – "நாங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை: குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை."***

***ஒடுங்கிப்போகிறதில்லை*** *— தொல்லைகள் / இன்னல்கள் அனைத்தும் நன்மைக்கேதுவாகவே செயல்படும் என்று, கர்த்தருடைய விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களின்மேல் நம்பிக்கையாயிருப்பதினால் (ஒடுங்கிப்போகிறதில்லை). R5670:6 பரி. பவுலுக்கு எப்போதும் தேவனுடைய கிருபையே போதுமானதாயிருந்தது. R2426:1**

***நம்பிக்கை இழப்பதில்லை (திருவி)*** *— காரியங்கள் மிகவும் இருளாகத் தோன்றினாலும், "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை" என்று கர்த்தரே கூறியிருப்பதால், கர்த்தருடைய ஜனங்கள் மனமுறிவடைகிறதில்லை / நம்பிக்கை இழப்பதில்லை. (எபி. 13:5) R5671:2 கர்த்தருடைய ஜனத்தின் கவலையோ நிச்சயமற்றதன்மையோ ஒருபோதும் நம்பிக்கை இழந்தநிலை என்கிற அளவிற்குச் சென்றுவிடக்கூடாது. R5671:2*

***2 கொரிந்தியர் 4:9 – "துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை."***

***திருவிவிலியம் – "துன்புறுத்தப்பட்டாலும் கைவிடப்படுவதில்லை: வீழ்த்தப்பட்டாலும் அழிந்துபோவதில்லை."***

***துன்பப்படுத்தப்பட்டும்*** *— தேவன்மீதும், அவருடைய*

*திட்டத்தின்மீதும் நீங்கள் கொண்டுள்ள அன்பினிமித்தமாகவும், சுவிசேஷத்தைச் சொல்ல விரும்புவதனிமித்தமாகவும், பெயர்க் கிறிஸ்தவர் கூட உங்களை விசித்திரமானவர் என்று நினைப்பார்கள்; கிறிஸ்துவினிமித்தம் நீங்கள் கனவீனமடைந்து, பைத்தியம் என்று எண்ணப்படுவீர்கள். A347 சிலர் துன்புறுத்தலை அனுபவிக்கும் மையப் புள்ளியாக இருப்பார்கள், மற்றவர்களோ அப்படித் துன்புறுத்தப்படுபவர்களுடன் சேர்ந்து பாடுபடுவதன் மூலமாக, அந்தத் துன்புறுத்தல்களில் பங்கடைகின்றனர். R5670:3 துன்புறுத்தலில் இருந்து தப்பி ஓடுபவர்களை நாம் கண்டனம் செய்யக்கூடாது. "ஒரு பட்டணத்தில் உங்களைத் துன்பப் படுத்தினால் மறு பட்டணத்திற்கு ஓடிப்போங்கள்." (மத். 10:23) R5671:3 துன்புறுத்தல்கள் நமக்கு வரும்போது, அவைகள் ஏற்படுவதற்கு நமது போக்கினில்தான் ஏதாவது காரணமாக அமைந்துவிட்டதா என முதலில் ஆராய்ந்து பார்க்க வேண்டும். R5671:3*

**கைவிடப்படுகிறதில்லை** — *நீதியினிமித்தம் துன்புறுத்தப் பட்டாலும், கர்த்தருடைய ஜனங்கள் கைவிடப்படுகிறதில்லை. R5671:3*

**கீழே தள்ளப்பட்டும்** — *ஆவியில் ஒரு பாரம், தனிமையின் உணர்வு, மன அழுத்தம் போன்றவற்றை உணருவது; இவை ஓரளவிற்கு சரீர ஆரோக்கியத்தில் ஏற்படும் பலவீனத்தின் மூலமாக இன்னும் மிகுதியாக நமக்குள் உணரப்பட வாய்ப்புள்ளது. (சரீரரீதியாக பலவீனமாகவோ அல்லது வலியுடனோ இருப்பவர்கள் மன அழுத்தத்தையோ மனக்கஷ்டத்தையோ மிகுதியாக உணருவதற்கு வாய்ப்புள்ளது.) R5671:4*

**அழிந்துபோவதில்லை (திருவி)** — *சுவிசேஷத்தின் ஆறுதல்கள் இல்லாமல், சுவிசேஷத்தின் உபத்திரவங்களைச் சகிக்க முடியாது. R27:3* கர்த்தர் துன்பத்தை அனுமதிப்பாராயின், அது நம்முடைய விசுவாசத்தையும், நேர்மையையும் அழிக்க அனுமதியாதபடிக்கு, நாம் மன உறுதியைக் / துணிவைக் கடைப்பிடிக்க வேண்டும், பொறுமையுடன் சகிக்க வேண்டும். R5671:4*

***பிலிப்பியர் 4:11 – "என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை; ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்."***

***நான் இப்படிச் சொல்லுகிறதில்லை*** – *அப். பவுல் பற்றாக்குறையில் இல்லை, ஏனென்றால் பரமபிதா தனக்கு உண்மையிலேயே தேவையானவற்றை வழங்குவார் என்பதில் அவர் திருப்தி அடைந்திருந்தார் – அதற்கு அதிகமானதை அவர் விரும்பவுமில்லை. R3129:5*

***நான் எந்த நிலைமையிலிருந்தாலும்*** – *கடமையானது தன்னை எந்த நிலையில் இருக்கச்செய்தாலும்சரி. R946:6*

***மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்*** – *மனநிறைவு, சந்தோஷமாக எதிர்நோக்கியிருப்பது, மனமகிழ்ச்சியாக/ உற்சாகமாக அடிபணிவது என்கிற ரீதியில் பரிசுத்தவான்களின் முன்மாதிரியும், ஆலோசனையும் இருக்க வேண்டும். A341 அதற்கென்று சோம்பேறித்தனமான மற்றும் இலக்கு இல்லாத மந்தமான விதத்தில் அல்ல, மாறாக நமது தாலந்துகளையும், வாய்ப்புகளையும் நம்மால் இயன்றளவுக்குச் சிறந்த முறையில் பயன்படுத்திய பிறகு, அத்தகைய முயற்சிகளின் பலன் எதுவாக இருந்தாலும்சரி அதில் நாம் மனத்திருப்தியடைய வேண்டும். R3129:5 நமது தரப்பிலான காரியங்களை இயன்றளவிற்கு சிறப்பாக செய்வதன் விளைவாக ஏற்படும் பலன்களில் (results) மனரம்மியமாக இருக்க வேண்டும்; பெரிய பெரிய விஷயங்கள் என்றில்லாமல், வாழ்க்கையின் மிகமிக எளிய அடிப்படை தேவைகள் சந்திக்கப்படுவதும் கூட அந்தப் பலன்களாக இருக்கலாம் – அதில் நாம் மனநிறைவோடு இருக்க வேண்டும்; ஆனாலும், வாய்ப்புகளையும், தாலந்துகளையும், நியாயமாகவும் அறிவுப்பூர்வமாகவும் பயன்படுத்தியதன் மூலமாக, அப்படிப்பட்ட பலன்கள் கிடைத்திருந்தால் மாத்திரமே நாம் மனரம்மியமாக இருக்க வேண்டும். R3129:5*

***பிலிப்பியர் 4:12 – "தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்,***

**வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்."**

**தாழ்ந்திருக்கவும்** – *உங்களை ஒழுங்குப்படுத்தவும், உங்கள் குணலட்சணத்தைச் சரியாகச் சமநிலைப்படுத்துவதற்கும் தேவையான அவமானங்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தயாராக இருங்கள். நீங்கள் அவமானத்தின்கீழாகக் கவலைப்பட்டு வருந்தினால், ஜாக்கிரதை; ஆவிக்குரிய வளர்ச்சியில் நீங்கள் ஏற்கெனவே அடைந்திருக்க வேண்டிய அளவுக்கு, இன்னும் நீங்கள் வளர்ச்சியடையவில்லை என்பதையே இது அர்த்தப்படுத்துகின்றது. R1920:5*

**வாழ்ந்திருக்கவும்** – *கர்த்தர் இன்று உங்களுக்குச் சிறிதளவு மேன்மையைக்/உயர்வைக் கொடுத்தால், அவருடைய ஊழியத்தில் வெற்றி பெறுவதற்குச் சிறிது ஊக்கமளித்தால், தேவன் இல்லாமல் உங்களுடைய தகுதியின்மையையும் பற்றாக்குறையையும் நினைத்துப் பார்த்து, அதனைத் தாழ்மையோடும், சாந்தத்தோடும் ஏற்றுக்கொள்ளுங்கள். R1920:6*

**குறைவுபடவும்** – *தேவையில் (குறைவில்) எப்படி இருக்க வேண்டும் என்பதையும், அப்படிக் குறைவில் இருந்தாலும், கர்த்தர் கொடுக்க விரும்புவதைத் தாண்டி எதையும் விரும்பாமல் இருப்பது எப்படி என்பதையும் கற்றுக்கொள்வோமாக. R3129:6*

***பிலிப்பியர் 4:13 – "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு."***

**கிறிஸ்துவினாலே** — *அவருடைய வல்லமை நமக்குப் போதுமானதாயிருக்கிறது. R5330:1 தேவன் மீதும், அவர் வாக்களித்துள்ள கிருபையின் மீதும் நம்பிக்கை வைப்பது, விரும்பத்தக்க மனத்தாழ்மையையும் சாந்தத்தையும் தக்க வைக்கின்றது, அதேசமயம் பரி. பவுலால் பரிந்துரைக்கப்பட்ட தைரியத்தையும் சக்தியையும் தருகின்றது – "எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது." (2 கொரி. 3:5) R5113:6*

*எந்தளவிற்கு அர்ப்பணிக்கிறோமோ, எந்தளவிற்கு பிதாவின் சித்தத்திற்கு முழுவதுமாக ஒப்புக்கொடுக்கிறோமோ, அந்தளவிற்கு கர்த்தருடைய ஊழியத்திற்குத் தயாராக இருக்கும் அவரது வாய்க்கருவிகளாக, அவரது கருவிகளாக நாம் அவரால் பயன்படுத்தப்படுவோம். R4458:5 "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது." (யோவா. 15:5) "எல்லாம் உங்களுடையது. நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர்." (1 கொரி. 3:22,23) இந்த வாக்குத்தத்தங்களின் பெலத்தில், நாம் தைரியத்தைப் பெற்று, கர்த்தருடைய ஆசீர்வாதங்களுக்குள் பிரவேசிக்கிறோம். R4064:1 "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால்." (யோவா. 17:7) நாம் என்ன செய்ய வேண்டும் என்பது தெய்வீக வார்த்தையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வரம்புகளுக்கு அப்பால் நாம் தெய்வீக உதவியைத் நாடக் கூடாது. R4061:6 வாழ்க்கையின் நீரோட்டத்துடன் எதிர்த்துப் போராடுவதிலுள்ள நமது பெலத்திற்கான ஆதாரம் யார் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. R4005:1 கிறிஸ்துவின் வல்லமையே பரி. பவுலின் மேல் தங்கியிருந்தது. (2 கொரி. 12:9, 10) R1558:5 நாடுகிறதற்தாக நமக்குள் இலவசமாக கொடுக்கப்பட்ட கிறிஸ்துவின் பலத்தின் மூலமாக. R772:5* ஆவியினால் மாத்திரமே நம்மால் ஜெயங்கொள்ளவும், மகிமையடையவும் முடியும். R160:2**

***எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு*** *— பிரதிஷ்டை மற்றும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதல் என்பவைகளின் மூலமாகவே, புதிய சிருஷ்டிகளாகிய நம்மால் (தேவன்) ஏற்றுக்கொள்ளக்கூடிய கிரியைகளைச் செய்ய முடியும். R5759:2 "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்." (1 யோவா. 5:4) R3088:4 தம்முடைய கிருபையைச் சார்ந்திருப்பவர்களை நன்கு பெலப்படுத்தி, சகாயமும்செய்வார் – "என்னைப் பலத்தால் இடைகட்டுகிறவர் தேவனே." (சங். 18:32) R2154:3 வ.11 மற்றும் 12 என்பவைகளின் அனைத்து விஷயங்களையும் (செய்ய எனக்குப் பெலனுண்டு). R1920:6 ஆவியினால் மாத்திரமே நம்மால் ஜெயங்கொள்ளவும், மகிமையடையவும் முடியும். R160:2* தேவனுடைய பராமரிப்பு*

*நமக்குப் போதுமானதாயிருக்கின்றது / போதுமானதைத் தருகின்றது – நமக்கான பரிந்துபேசுபவர், நமக்கு ஆதரவளிக்கவும், தப்பிக்கும் போக்கை வழங்கவும், நம்மைப் பெலப்படுத்தவும், "ஏற்றகால போஜனத்தைக்" கொடுக்கவும், நம்மை திடப் படுத்தவும், அவருடைய வாக்குத்தத்தங்களை நினைப்பூட்டவும் வல்லவராயிருக்கிறார். NS755:5*

### *1 கொரிந்தியர் 7:24 – "சகோதரரே, அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கக்கடவன்."*

### திருவிவிலியம் – "சகோதர சகோதரிகளே, நீங்கள் ஒவ்வொருவரும் அழைக்கப்பட்டிருக்கிற நிலையிலேயே கடவுள்முன் நிலைத்திருங்கள்."

***சகோதர சகோதரிகளே (திருவி)*** *– தன் மனச்சாட்சிக்கு எதிரானதாகவும், தன் சக சிருஷ்டிக்குப் பாதகமானதுமாயும் காணப்படும் வேலையில் ஒருவன் காணப்படும்போது, அவன் கிறிஸ்துவுக்குள்ளான சகோதரனாய் இரான். R5498:4*

**அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே** *– ஒருவன் அழைக்கப்பட்டபோது அவனுக்குத் திருமணமாகி இருந்தால், அவனுடைய நேரம் (ஏற்கெனவே) அடைமானம் வைக்கப்பட்டுள்ளது. R5498:2*

**தேவனுக்கு முன்பாக** *– கர்த்தர் தம்முடைய உண்மையுள்ள அனைவருக்கும் சிறந்ததையே கொடுப்பார். R5498:5*

**நிலைத்திருக்கக்கடவன்** *– மன அமைதியோடு அதில் காணப் படுங்கள். கர்த்தருடைய ஜனங்கள் தாங்கள் அழைக்கப்பட்ட நிலைமையினின்று உடனே மாற்றம் வேண்டும் என்றிருக்கக் கூடாது. R5498:1 கைதியாக இருக்கும் ஒருவன், "இங்கே சிறைச்சாலையில் நான் இருக்கையில் தேவனுடைய வழிநடத்து தலின்படி இந்தச் சுவிசேஷ செய்தியானது என்னை வந்தடைந்துள்ளது. ஒருவேளை நான் இங்கு வந்திருக்கவில்லை யெனில் சத்தியம் எனக்குக் கிடைத்திருக்காதே – எனக்கு இங்கே (கர்த்தருக்காய் ஊழியஞ்செய்வதற்கான) வாய்ப்புகள் இருக்கலாம்" என்று சொல்லுவது நலமாயிருக்கும். R5498:5*

**I கொரிந்தியர் 7:24 – “சகோதரரே,
அவனவன் தான் அழைக்கப்பட்ட
நிலைமையிலே தேவனுக்கு முன்பாக
நிலைத்திருக்கக்கடவன்.”**

**திருவிவிலியம் – “சகோதர சகோதரிகளே,
நீங்கள் ஒவ்வொருவரும்
அழைக்கப்பட்டிருக்கிற நிலையிலேயே
கடவுள்முன் நிலைத்திருங்கள்.”**



BIBLE STUDENTS
Food for New Creature